ஸ்ரீ

ஆண்டாள் கல்யாணம்

என்னும்

# கோதை பரிணயக் கும்மி

ஸ்ரீரங்கம்
ரங்கநாயகி அம்மாளால்
இயற்றப்பட்டது

TRICHINOPOLY:
JEGAM & CO. LD., DODSON PRESS
1914

*Copy right Registered*

O -85 MARU, A.
N14
168243



ஸ்ரீ

# ஆண்டாள் கல்யாணம்

என்னும்

# கோதை பரிணயக் கும்மி.

---

## 1-வது கும்மி.

சோக்கர் அலங்காரம்-மெட்டு.

கோதை கல்யாணமதைக் கும்மியதாய் நான்பாட
வேதாந்ததேசிகரை வந்தனங்கள் செய்துறைப்பேன்
பதின்மருடன் மதுரகவி பாதமலர் தெண்டனிட்டேன்
எதிராஜர் சேவடியை எண்ணியிப்போ சொல்லிடுவேன்

கும்மி.

ஸ்ரீங்காரமான ஸ்ரீவில்லிபுத்தூரில் செழித்திட விஷ்ணுசித்தர் [வளர்த்த
மங்களமான மலர்வனந்தனில்பூ மங்கையும்வந்து அவதரித்தாள்

### ராமாவதாரனடி.

ஆடிப்பூரந் தன்னிலே அன்புடன் காலையிலே
நாடிமலரெடுக்க விஷ்ணுசித்தர் நந்தவனத்தில் வந்தார்

### கும்மி.

காலையினில்பதி னாயிரங்கோடிக் கதிரவனுதய மானுப்போல்
கோலமுடைய துளசிவனத்தில் குழந்தைவடிவினைக் கண்டுகந் [தார்

### ராமாவதாரனடி.

வாரியவரெடுத்து வாழ்த்தி மடியில் வைத்து
கோரிமகிழ்வுடனே விஷ்ணுசித்தர் கொண்டுவந்தார் தன்கிர [கத்தில்

### சோக்கர் அலங்காரம்.

ஆசையுடன் பெண்மணிக்கு அழகியதோர் தொட்டிலிட்டார்
வாசமலர்க் கோதையென வாஞ்சையுடன் பேருமிட்டார்
தவிழ்ந்துகந்தாள் பெண்மணியும் தளர்நடைகள் தான்நடந்தாள்
மகிழ்வுடனே பருவமதாய் மார்கழியில் நோன்புசெய்தாள்

### கும்மி.

வாசமருமலர் மாலைதந்தைவட பத்திரர்க்களிக்க வைத்திருக்க
ஆசையாய்த்தன்குழல் சூடிக்கலைத்தவள் அன்புடன்வைத்து [மகிழ்ந்திருந்தாள்

### ராமாவதாரனடி.

மங்கைப் பருவமதில் ரங்கநாதரை மணக்க
பொங்கியே மகிழ்வுடனேகோதையும் புத்தியில் நினைத்திருந்தாள்

---

## 2-வது கட்டம்.

### இந்தப் பூங்காவினிலே-மெட்டு.

1 அன்னமொத்த நடையாள் கொடிமின்னலொத்த இடையாள்
சின்னஞ்சிறிய நங்கோதை ஸகியுடன்சேர்ந்து மகிழ்ந் [துகந்தாள்

2 மாலைப்பொழுதினிலே நல்ல மாமலர்ச் சோலையிலே
பாலைப்பருவமுடைய ஸகியுடன் பந்துகள் ஆடவெண்ணி
3 பங்கையம்போல் முகத்தாள் உயர் பானுவினைப்பழித்தாள்
மங்கைகோதை தோழியுடன்கூடி மாமலர்ச்சோலை வந்தாள்
4 நந்தவனத்தை கண்டாள் அந்தநங்கை மகிழ்ந்துகொண்டாள்
கந்தமாமலர்ச் சோலையின் காக்ஷியைக் காதலுடனே
[விண்டாள்

---

## 3-வது கட்டம்.

### ஸ்ரீராமச்சந்திரனே-மெட்டு.

1 மல்லிகை முல்லையடி மருவேர் தவனமடி
மனோ ரஞ்சிதமலர் பார் பார் பார் ஸகி
2 மந்தாறை புன்னையடி மகிழம்பு கொன்னையடி
மஞ்சள் சாமந்திமலர் பார் பார் பார் ஸகி
3 பன்னீர் துளவமடி பாதிரி விருக்ஷியடி
பச்சை குருக்கத்தியை பார் பார் பார் ஸகி
4 பாரி ஜாதமடியோ பட்டுரோஜா வடியோ
பாங்காம் மன்மதபாணம் பார் பார் பார் ஸகி
5 செந்தாமறை யடியோ செங்கழுநீ ரடியோ
செவ்வல்லி மலரோடை பார் பார் பார் ஸகி
6 அந்தரங்க ஸகியே இந்துஸம முகியே
பந்து விளையாட வா வா வா ஸகி

---

## 4-வது கட்டம்.

### பஹாரிமோரி—மெட்டு.

பாங்கியுடன்கூடி பூங்கோதை பந்தாடினாள்

சரணங்கள்.

1 ஓங்கியதோர் கோல உன்னித விசால
பூங்காவனந் தன்னிலே அ ஆ பாங்கி

2 பந்தயங்கள் வைத்தாள் பாலினைப் பிடித்தாள்
பாங்காய் மகிழ்ந்தடித்தாள் அ ஆ பாங்கி
3 ஓங்கியே எறிந்தே வாங்கியவள் பந்தை
ஒய்யாரமாய் மகிழ்ந்தே அ ஆ பாங்கி
4 அன்னமொத்த நடையாள் மின்னலொத்த இடையாள்
ஆண்டாள் மகிழ்வுடனே அ ஆ பாங்கி

---

## 5-வது கட்டம்.

### காமுனி வினவே-மெட்டு.

தங்கியங்கு தனித்திருந்தாள் பூங்கோதை
தங்கியங்கு தனித்திருந்தாள்

சரணங்கள்.

1 பங்கயநீரோடையிலே பளிங்குகல்மேடையிலே
மங்கைதோழியைப்பிறிந்து மந்தகாசத்துடனே தங்கி
2 முத்துச்சொருக்கழகி மெத்தவடிவழகி
பத்மமலர்முகத்தில் நத்துபுலாக்குமின்ன தங்கி
3 கம்மல்ஜிமிக்கியுடன் காதில்முருகுதுன்ன
கஸ்தூரிப்பொட்டுடனே கமலமூக்குத்திமின்ன தங்கி
4 மார்பில்பதக்கமுடன் மாங்காய்மாலைபவளம்
காறைமகரகண்டி காசிமாலை துலங்க தங்கி
5 கங்கணம்தோடாவங்கி கையில்கிளிவிளங்க
தங்கவொட்டியாணமுடன் தாழம்புப்பட்டிலங்க தங்கி
6 தாமறைப்பாதமதில் தண்டைசிலம்பொலிக்க
பிரேமையுடனரங்கர் நாமஸ்மரணைசெய்து தங்கி

---

## 6-வது கட்டம்.

### மாமியே நானேன்ன-மெட்டு.

அழகியமா மணவாளரும்
ஆண்டாளைக்காணவே ஆவலுடனேவந்தார் அ

சரணங்கள்.

1 பாம்பணைமேல்பள்ளி நீங்கினர்
பாவைகோதை அழகைப்பார்த்திட ஏங்கினர் அ
2 சங்குசக்கரமு மேந்தாமலே
சதிருடன் கருடனைமதித்து ஏராமலே அ
3 காதல்திருவை மறந்தனர்
கடுகிவில்லிப்புத் தூரைக்காணவே பறந்தனர் அ
4 பாகிரதியைப்பெற்ற பாதத்தால்
பறந்துநடந்து கோதைபார்க்க எதிரில்நின்றார் அ

---

## 7-வது கட்டம்.

### தெள்ளு தமிழுக்குதவும் காவடிச்சிந்தின்-மெட்டு.

1 வண்டினமுறலும் நல்ல சோலை வளர்
தண்டிருவரங்க நகர மாலை கண்டு
வாசமலர்க்கோதை விசுவாசமாயவர்வடிவை
பார்த்தாள் மனம் வேர்த்தாள்
2 காக்ஷியாம் இவர்வடிவைத் தானே கண்டால்
காமனும் மதிமயங்கு வானே என்று
காதலோடரங்கநகர் நாதனுர்வடிவழகைக்
கண்டு துதி விண்டு
3 அந்தமுள்ள சுந்திரரும் யாரோ யிவர்
அன்புடன் வசிப்பதெந்த வூரோ என
அறியமனந்தனிலே தெறியநினைந்துமலர்க்
கோதை யந்தப் போதே
4 செம்பவளவாய் திறந்தம் மாதே அங்கு
செப்பினளோர் வார்த்தை யந்தப் போதே மிகச்
செழிக்கும்மலர்வனத்தில் கொழித்துஎதிரில்நின்ற
தார்நீர் இத்தைக் கூர்வீர்

---

## 8-வது கட்டம்.

பாளைவாய்கமுகில் வந்தூர் காவடிச்சிந்து-மெட்டு.

1 தொல்லுலகெங்கும்புகழும் வில்லிபுத்தூர் தன்னில் வாழும்
வல்லிகோதை வார்த்தைகேட் டுகந்தனர் பதில்
சொல்லிட எதிரினிலே வந்தனர்
2 ஆடிப்பூரம்தன்னில் வந்தாய் நாடினில்மிகச் சிறந்தாய்
ஈடில்லா வடிவமைந்தாய் அன்னமே உன்னை
நாடியே மனமுகந்தேன் முன்னமே
3 அண்டமுழுதுண் டுமிழ்ந்து ஆசையுடன்கண் டுகந்து
ஆதிமுதலாளும் மன்னன் நானடி உந்தன்
கோதிலாமலர் வனம்வந் தேனடி
4 காட்டகத்தில் வேட்டையாடக் கூட்டிவந்த மானதோடக்
கண்டிடாமல் தேடிவந்தேன் பெண்மணி உன்னை
கண்டுமையல் கொண்டுகந்தேன் கண்மணி

---

## 9-வது கட்டம்.

ஆனைமுகத்தவனே ஆதி ஐயா-மெட்டு.

1 பெரியாழ்வார் பெற்றெடுத்த பெண்மணியே
அரியாயோ நீயுமென்னை ஆண்டாளே கண்மணியே
அன்னமே உன்னையே அன்பதாக நாடிவந்தேன்
அணியரங்க ராஜனடி
2 பட்டர்பிரான் மகிழும் பாவையரே
எட்டநிற்காதே எந்தன்கிட்ட வாயென் பூவையரே
பாவையே பூவையே பர்க்கவாசை கொண்டுவந்தேன்
பணியரங்க ராஜனடி
3 தங்க நிறத்தையொத்த மங்கையரே
ரங்கநகரைவிட்டு இங்குவந்தேன் நங்கையரே
தையலே மையலாய் தாகமுடன் ஓடிவந்தேன்
தண்ணரங்க ராஜனடி

4 கோதை நீகொஞ்சங்கண்ணால் பாரடியோ
மாதே உன் தஞ்சம் மனவாளனென ஓரடியோ
மங்கையே தங்கமே மையல்கொண்டு ஓடிவந்தேன்
மதிளரங்க ராஜனடி

---

## 10-வது கட்டம்.

**அருமை ஸீதையை என்னும் ராமாயணச்சிந்து-மெட்டு.**

என்னருமைக்கோதையே யுன்னை நானே காண
ஆசைகொண் டிங்குவந் தேனே என்

சரணங்கள்.

1 பெருமைத் துளவமலர்த்தேனே ஆஆ பெண்ணேபெண்ணே
என் கண்ணே உயர்
பெரியாழ்வார் பெற்றபெண்மானே என்
2 திருப்பாவை பாடியமாதே ஆஆ தேனேதேனே
பெண்மானே உன்னை
தேடிவந்தேனே இப்போதே என்
3 செங்கமலக் கடைக்கண்பாராய் ஆஆ தேவிதேவி
என் ஆவி என்னை
சேர்ந்தரங்க நகர்வாராய் என்
4 சூடிக்கொடுத்துகந்த பெண்ணே ஆஆ பாவேபாவே
நல்பூவை அதி
சுந்திரவதியே என்கண்ணே என்

---

## 11-வது கட்டம்.

ஒருத்திக் கோருமகன்டி என்னும்-மெட்டு.

1 ஸ்ரீரங்கமானகரம் கோதையே தங்கம் அடி என்பின்
சேர்ந்திப்போவந்திடுவாய் கோதையே தங்கம்
பாரெங்கிலும்சிறந்த கோதையே தங்கம் அடி நீயும்.
பார்த்தால்மகிழ்ந்திடுவாய் கோதையே தங்கம்

2 காவேரிதீரமடி கோதையே தங்கம் அடி நல்ல
காஷியுள்ளதேசமடி கோதையே தங்கம்
பூவலர்சோலையடி கோதையே தங்கம் அடி சுற்றி
பொன்னுல்மதிள்களடி கோதையே தங்கம்
3 வேதவிமானமுண்டு கோதையே தங்கம் அடி அங்கு
வேண்டும்நிதிகளுண்டு கோதையே தங்கம்
ஆதியரவணையாம் கோதையே தங்கம் அடி மிக்க
அற்புதமாம்மெத்தையுண்டு கோதையே தங்கம்
4 சிந்தைமகிழ்வுடனே கோதையே தங்கம் அடி நாமும்
சேர்ந்துஸுகித்திருப்போம் கோதையே தங்கம்
எந்தன் கரம்பிடித்துக் கோதையே தங்கம் அடி நீயும்
இப்பொழுதேவந்திடுவாய் கோதையே தங்கம்

---

## 12-வது கட்டம்.

ஆருமுகவடிவேலவனே என்னும் காவடிச்சிந்தின்-மேட்டு.

1 ஆதியரங்கனே மாதெனக்குக்கலி
யாணமும் ஆகவில்லை எந்தன்
அய்யாறியாமல் கையைப்பிடிக்குறீர்
அய்யாகேள் எந்தன்சொல்லை
2 வேதியர்வேத விதிப்படியேநல்
விவாகம்செய்தால் தறமோ நீரும்
வேந்தரைப்போலவே காந்தருவம்செய்ய
வேண்டுதலும் அறமோ
3 மாதவரெந்தை அறியாமலெந்தன்
மலர்க்கை தொடலாமோ முன்னம்
மாரனைப்பெற்றவா மாரன்வசத்தில்
மனத்தை விடலாமோ
4 பாங்கியர்கூடியே பார்த்துவிட்டாலென்னை
ப்ரிஹஸிப்பாரே அவர்
பந்துகள்கொண்டிதோ வந்துவிட்டார்நீரும்
பார்த்து மறைவீரே

5 வேயர்புகழ்ந்திடும் விஷ்ணுசித்தர்தினம்
வேண்டிப்பணி வேதா உம்மை
வேண்டுகிறேன்சற்று விட்டுப்பிறிந்திடும்
விமல பொற்பாதா

6 எந்தைபெரியாழ்வார் தன்னிடத்திலிதை
ஏகியே செப்புகிறேன் நீரும்
எந்தனையுமுந்தன் சிந்தைமறக்கா
திருக்கக்கை கூப்புகிறேன்

7 அந்தரங்கமுள்ள சுந்திரனேயென
தாசை மணவாளா நீரும்
வந்திடும்நாளைக்கே வதுவைசெய்திட
வனச பொற்தாளா

---

## 13-வது கட்டம்.

### கோலாட்டப்பாட்டு-மெட்டு.

1 அழகிய மணவாளர்க் கிதுவுரைத்
தாண்டாள் மகிழ்வுடனே
பழகியதோழியைப் பறிவுடன்கூடியே
பாங்குடன் மனைக்குவந்தாள்

2 தந்தையர் அடிபணிந்தாள் கோதையும்
தன்மனமதை மொழிந்தாள்
சிந்தையில்வெக்கமாய் சிரத்தைக்கவிழ்ந்துமேதன்
செல்வியும் நிற்ககண்டார்

3 ஆண்டாள் மனமறிந்தார் ஆழ்வார்
அன்புடன் மிகமகிழ்ந்தார்
அன்னமேநானுன்னைப் பொன்னரங்கேசர்க்கே
ஆசையாய்த் தருவேனென்றார்

4 பெண்மணிதனைப் புகழ்ந்தார் ஆழ்வார்
பிரியமுடனே மகிழ்ந்தார்
கண்மணிநானுன்னைக் கஸ்தூரிரங்கர்க்கே
கல்யாணம் செய்வேனென்றார்

5 நல்லதோர்நாள் அமைத்தார் மணவோலை
நாகரீகமாய்ப் படித்தார்
நாநுதேசத்து அரசர்களனைவர்க்கும்
நட தூதனுப்பி வைத்தார்
6 அன்புடன் நூற்றெட்டுத் திருப்பதி
அமர்ந்திடும் பெருமாள்க்கும்
ஆண்டாள்திருமணப் பத்திரிகையனுப்பி
ஆனந்தமா யுகந்தார்

---

## 14-வது கட்டம்.

நூலாபிஸ் சிந்து-மேட்டு.

கண்ணாயிரங்கள் போருமோ ஆண்டாள்
கல்யாணக்காக்ஷியைக் காண்பதற்கு கண்

சரணங்கள்.

1 விண்ணோருலகிலிருந்து விச்வகர்மன்
விரும்பியபடிபந்தல் முடித்துவைத்தான்
எண்ணாத வால்ஸயிட் குளோபர்
எங்கெங்குமேற்றியே விளங்கவைத்தான் கண்
2 பாக்குக்குலை வாழைக்குலை உயர்ந்த
பலவகையானதோர் பழக்குலைகள்
தேக்குக்குலை கமுகுகுலை எங்கிலும்
தேங்காய்க்குலைகளும் கட்டியுகந்தார் கண்
3 உன்னித கோபுரங்களில் தோரணம்
உயர்ந்தஜண்டையுடனே பறக்கவிட்டார்
பன்னீரால் ஜலம்தெளித்தார் எங்கிலும்
பஞ்சவர்ணப்பொடிக் கோலமிட்டார் கண்
4 அன்னதானம் சொர்ன்னதானம் பூதானம்
ஆயிரக்கணக்கான கோதானம்
நன்னுகச் செய்துகந்தார் ஆழ்வார்
நான்குவருணத்தார்க்கும் பூரிகொடுத்தார் கண்

5 அஷ்டாதெச வாத்யமடித்தார் எங்கிலும்
அரம்பையர்போ லனேகர்நடித்தார்
எட்டாத பாக்யமென்றார் வில்லிபுத்தூர்
எங்கிலும்பொங்கியே மகிழ்ந்துகின்றார் கண்

## 15-கட்டம்.

### ஆண்டவன் மித்திரன்-மெட்டு.

1 ஆண்டாள் கல்யாணக் காக்ஷியைக் காணவே
அந்தணர் பலரும் வந்தார்
ஆசையுடன் பல தேசம் வாழ்ந்திடும்
அரசரும் பார்க்க வந்தார்
2 வேங்கட மாமலே வாசனும் வேகமாய்
வில்லிபுத் தூரில் வந்தார்
வேதியர் போல் வேஷம் பூண்டார்
விரும்பியே மண முகந்தார்
3 மாலிருஞ் சோலேவாழ் மாயவன் கேட்டுடன்
மையலாய் மனந் தளந்தார்
மாது கோதையை மணம்புரி வேனென்று
மகிழ்வுடன் வந் திருந்தார்
4 திருத்தங்கா லப்பனும் கேட்டுடன் கோதைமேல்
தீரா மையல் கொண்டார்
தேவிக் கோதையைக் கல்யாணம் செய்யவே
திருவுளந் தன்னில் நினைந்தார்
5 வாடியெரிந்த பூவைச் சூடிமகிழ்ந் துகந்த
வட பத்திரர் நினைந்தார்
ஆடிப் பூரத்தில் உதித்தவ ளெனக்கென்று
ஆசையாய்ப் படுத் திருந்தார்
6 பகிரங்கமாகவே பணியரங் கேசனே
பாரா மலே கோதை
பறபறப் பாகவே தோழியைக் கூட்டுடன்
பகர்ந்தன ளப் போதை

## 16-வது கட்டம்.

### துலுக்கு வாரங்காணலியோ-மெட்டு.

இன்னம்வரக்காணேனடி என்னுடையநேசன்
தென்னரங்கேசன் இன்னம்

சரணங்கள்.

1 பொன்னரங்கவாசனடி புண்ணியர்விசுவாசனடி
என்னுடைய பிராணேசனடி எந்தன்ஸகியே
இந்துமுகியே இன்னம்

2 அம்புயபொற்தாளனடி அழகியமணவாளனடி
ஆசைக்கண்ணாளனடி எந்தன்ஸகியே
இந்துமுகியே இன்னம்

3 சுத்தஸத்வகுமாரனடி சுந்திரவொய்யாரனடி
சித்தமுறைதீரனடி எந்தன்ஸகியே
இந்துமுகியே இன்னம்

4 ஆழிதுயிலய்யனடி ஆழிநிறமெய்யனடி
ஆழியேந்துங்கையனடி எந்தன்ஸகியே
இந்துமுகியே இன்னம்

---

## 17-வது கட்டம்.

### ஆரண்யத்தில் ஓரரசன்—மெட்டு.

1 ஆவலுடன் கருடனையே அழைத்துமேகோதை
பாவையரும் காதலுடன் பகர்வளப்போதே

2 பக்ஷமுடன் வேகமதாய் பக்ஷிராஜனே
இக்ஷணத்தில் கூட்டிவாரும் ரங்கராஜனை

3 வேகமுடன் போய்வருவீர் வினுதையின்பாலா
தாகமுடன் காத்திருப்பேன் தயகுணசீலா

4 என்றசொல்லை கேட்டுகந்து ஏகியேகருடன்
சென்றுடனே வேகமதாய் ஸ்ரீரங்கநகரும்

5 பொங்குபுகழ் ரங்கநாதன் பொன்னடிபோற்றி
மங்கைகோதை வாய்மொழியை மகிழ்வுடன் சாற்றி

6 வாருமைய்யா கார்த்திருக்கிருள் வஞ்சியர்கோதை
ஏருமைய்யா எந்தனுடைய தோளிலிப்போதே

---

## 18-வது கட்டம்.

### கங்காதரா-மெட்டு.

1 வந்தனம்செய்து சிந்தைமகிழ்வாய் வைணதேயரும்
தந்திருத்தோள்தனில் தண்ணரங்கேசனை தாங்கியேவந்தார்
2 பட்டர்பிரானப்போ கண்டுமகிழ்ந்தார் பணியரங்கனை
அஷ்டாதெசவாத்ய முழங்கவேயெதிர் அன்புடனழைத்தார்
3 மாதவள்கோதை மணாளனிவரென மாதவர்மகிழ்ந்தார்
வேதங்களோதிடும் வேதியர்ஸதஸில் வேண்டியேபுகழ்ந்தார்
4 நாளைவதுவை மணமெனநல்லதோர் நாழிகைதனிலே
கோளரிமாதவன் தனக்குகோதையை கொடுக்கவே
[நினைந்தார்

---

## 19-வது கட்டம்.

### பலமகசிலோடிலைகோ-மெட்டு.

சிந்தைமகிழ்வாகி வாரார் ஸ்ரீரங்கநகர்வாசன்
பாராய் கோதேயுன் பிராணேசன் சிந்தை

சரணங்கள்.

1 சுந்திரஞ்சேர்மாதே கந்தமலர்க்கோதே
சிந்தைமகிழுங் குணாளன் உந்தன்
அந்தரங்க மணவாளன் சிந்தை
2 சுத்தசுகுமாரன் சுந்திரவொய்யாரன்
உத்தம குணாளனடி கோதை
உந்தன் மணவாளனடி சிந்தை
3 பொன்னரங்கவாசன் புண்ணியர்விச்வாசன்
அன்னமே விச்வாசனடி. கோதை
உன்னுடைய பிராணேசனடி சிந்தை

4 பூமகளேவாராய் மகிழ்ந்துநீபாராய்
ச்யாமள சீரனடி கோதை
கோமள ஒய்யாரனடி சிந்தை

---

## 20-வது கட்டம்.

நலுகீட சோபசலராரா—மெட்டு.

ஸ்ரீங்காரம் செய்துகொள்வாய்
ஸ்ரீரங்கநாதன் வந்தார் நீயும் ஸ்ரீ

சரணங்கள்.

1 ரங்கர்மகிழ்வாயிரு செங்கைத்தலத்தால்திரு
மங்கலியம் சாத்தவே நீயும் ஸ்ரீ
2 கண்ணேமயிலேயுன்னை கஸ்தூரிரங்கரின்னே
கல்யாணம் செய்திடவே நீயும் ஸ்ரீ
3 சாயக்கொண்டைபோடுவேன் சம்பங்கிப்பூச்சூடுவேன்
சந்தோஷமாகி இப்போ நீயும் ஸ்ரீ
4 சந்திரன்சுட்டிப்பட்டம் சவுரிகொட்டைராக்குடி
சடைநாகம் சாத்திடுவேன் நீயும் ஸ்ரீ
5 கஸ்தூரிப்பொட்டிடுவேன் கண்ணுக்குமையிடுவேன்
காதலுடனே நன்ருய் நீயும் ஸ்ரீ
6 இச்சையானபூஷணம் எண்ணம்போல்சாத்திடுவேன்
மெச்சி மகிழ்வுடனே நீயும் ஸ்ரீ

---

## 21-வது கட்டம்.

சேடியே மதுரைக்கு-மெட்டு.

1 சுரும்பமர் பூங்குழல் சுந்திரவதி கோதை
சொகுசுடன் சிங்காரம் செய்தங் தப்போதே
2 மங்களமாய் பெண்கள் மகிழ்ந்து கொண்டாடவே
மாமறை யவர்பலர் புகழ்ந்தங்கு கூடவே

3 மின்னல் கொடியையொத்த மெல்லி யிடைதுவள
அன்னநடை நடந்து அழகியசபை வந்தாள்
4 திங்கள் வதனமுள்ள மங்கை மகிழ்ந்துகொண்டு
ரங்கநாதனைக் கடைக் கண்களினால் கண்டு

---

## 22-வது கட்டம்.

### வந்தனம் தந்தேன்-மெட்டு.

பல்லவி.

மாலைசாத்தினாள் கோதை மாலைமாத்தினாள்

அநுபல்லவி.

மாலடைந்து மகிளரங்கமா லவர்தன் மார்பிலே
மையலாய் தையலும் மாமலர்க் கரத்தினால்பூ

சரணம்.

ரங்கராஜனை அன்பர்தங்கள் நேசனை
ஆசிகூறி பூசுரர்கள் பேசிமிக்க வாழ்த்திட
அன்புடன் இன்பமாய் ஆண்டாள் கரத்தினால்பூ

---

## 23-வது கட்டம்.

### ராகம்-பைரவி. ஊஞ்சல்.

1 மங்களம்சேர் புதுவையின்மா நகரின்மீதே
மலர்த்துளவில் அவதரித்த மங்கைகோதை
ரங்கமன்ன ருடனேரத்ன ஊஞ்சல்மீதே
பொங்கிமகிழ் வுடனுகந்து ஆடிரூஞ்சல்
2 சதுர்முகனுங் கலைமகளும் வடந்தொட்டாட்ட
சங்கரனும் மலைமகளும் வடந்தொட்டாட்ட
மதிரவியும் மகிழ்ந்துவெண் சாமறைகள்போட
மலர்க்கோதை மன்னருடன் ஆடிரூஞ்சல்

3 தும்புருவும் நாரதரும் கீதம்பாட
துலங்கிடவே கந்தருவர் இசைகள்போட
அம்பரத்தில் அரம்பையர்கள் நடனமாட
ஆண்டாள் அரங்கருடன் ஆடிரூஞ்சல்
4 பதின்மர் ஆழ்வார் மதுரகவிகள்கூட
பட்டர்பிரான் மனமுகந்து பல்லாண்டுபாட
எதிராஜர் பின்னுன எங்கள் கோதை
என்னரங்க மன்னருடன் ஆடிரூஞ்சல்

---

## 24-வது கட்டம்.

### லாலி.

1 ஆடிப்பூரத்துதித்த ஆண்டாள் நம்கோதை
அணியரங்கருடன் ஊஞ்சலாடினள் அப்போதே லாலி
2 பாடிப்பாமாலைதந்த பட்டர்பிருன் கோதை
பணியரங்கருடன் ஊஞ்சலாடினள் அப்போதே லாலி

---

## 25-வது கட்டம்.

### லாலி, ராகம் எதுகுலகாம்போதி.

விஷ்ணுசித்தர் குமாரி விமலமுகவொய்யாரி லாலி லாலி என்னை
ரக்ஷித்தருள வேணும்ரங்க நாயகர்பாரி லாலி லாலி
மாதுசிரோன்மணி மந்தகாஸ வதனி லாலி லாலி அதி
ஸாதுஸர்ஜனநேசி சியாமளாங்கர் விச்வாஸி லாலி லாலி

---

## 26-வது கட்டம்.

### லாலி, ராகம் தோடி ஆதிதாளம்.

லாலிபாடினுள் கோதை டோலையாடினுள்

சரணம்.

காவிமேய்த்த கருணைமுகிலை கடைக்கண்ணாலே கண்டு [கோதை
பாலையுவதி மகிழுமப்போதே பரிகாசமாய்
பலதோழியர் பாங்காய்தோடி ராகந்தனில் லாவி

---

## 27-வது கட்டம்.

### வேதமனதிஜா-மெட்டு.

கோதையுடன் அரங்கநாதன் மகிழ்ந்துரத்ன
வேதிகை மீதினில் வீற்றிருந்தார்

சரணங்கள்.

1 மாதவமறையோர் மாமறை பாடவே
மாதர்கள்மங்களம் பாடியே கூடவே
காதலாயகிலரும் கண்டுகொண் டாடவே
காக்ஷியைதேவர்கள் களிப்புடன் நாடவே கோ
2 அஷ்டலக்ஷ்மியின் அம்சமாய் உதிக்கும்
அழகியேயிவளென அனைவரும் மதிக்கும்
பக்ஷமுடன்ஜனங்கள் பார்த்துமே துதிக்கும்
பாக்யவதியெனவே மனமதில் பதிக்கும் கோ
3 பொன்னுலகத்திலுள்ள பூவையர் போத்திட
மன்னும்மருமலர்ப் பூமாலைகள் சாத்திட
முன்னம்கவரிவீசி மோகமாய்ப் பாத்திட
சின்னஞ்சிருக்கோதைதன் சேவடி ஏத்திட கோ
4 இச்சையுடனிந்திரன் எச்சரிக்கை படிக்க
யீசனயன்மகிழ்ந்து இணையடி பிடிக்க
மெச்சியரம்பையுடன் மேனகை நடிகக
மேதினி புகழ் பல வாத்யமு மடிக்க கோ

---

## 28-வது கட்டம்.

பல்லவி.

ஸாமிராடேமந்துனே ஜாவளி-மெட்டு.

ரங்கநாதன் கோதைக்கி திரு
மங்கலியம் சாத்தினர் ரங்க

அநுபல்லவி.

எங்கெங்கும் கொண்டாடவேதான் ரங்க

சரணங்கள்.

1 ஓதியுணர்ந்தவிப்ரர் ஓமம்வளர்க்க
வேதியர்வேதம் கிளேக்க ரங்க

2 அந்தரத்துதேவர்கூடி கீதம்பாடவே
தேவமாதர் ஆடவே ரங்க

3 துய்யமுனிவர்வந்து துதிகள் செய்யவே
பூமாரி பெய்யவே ரங்க

4 பட்டர்பிரான்மகிழ்ந்து பார்த்துநாடவே
பல்லாண்டு பாடவே ரங்க

---

## 29-வது கட்டம்.

பல்லவி.

ஆனந்தமானந்த மாய்த்துதே நம
ஆண்டாள்கல்யாணங்காண வாய்த்துதே ஆ

அநுபல்லவி.

ஞானந்துலங்கி எங்கும் நன்மை விளங்கித்தே ஆ

சரணங்கள்.

1 தும்புருநாரதர் பாடினர் நல்ல
துய்யமுனிவர்கள் கொண்டாடினர்
அம்பரத்தினில் தேவமாதர்களாடினர்

2 பதினருவாத்ய முழங்கினர் ஆழ்வார்
பாங்காய் தாம்பூலம் வழங்கினர்
மதிமுகமாதர்கள் மங்களம் பாடினர் ஆ

---

## 30-வது கட்டம்.

லக்ஷ்மீ கல்யாணம்-மெட்டு.

பல்லவி.

ஆண்டாள் கல்யாணமே வைபோக்யமே ஆ

சரணங்கள்.

1 தூண்டாத மணிவிளக்காய் தொல்லுலகி லுதித்தாள்
தூயரரங்க நாதர்பதம் துலங்கமனம் பதித்தாள் ஆ
2 பட்டர்பிரான் மனமகிழ பாருலகி லுதித்தாள்
பக்தியுடன் திருப்பாவை பாடிதினம் துதித்தாள் ஆ

---

## 31-வது கட்டம்.

இகநேமந்துனே செலியா என்னும் ஜாவளி-மெட்டு.

நலுகீட தய சேசிரா நாகேந்திரசயன
நாதோனூ ஈவேள நலுகீட

சரணங்கள்.

1 பிலசின நாமீத பிகுவேமோ நாஸாமி
பிரீயா ஓமாயா மாநேயா ஈவேள நலுகீட
2 கருணா ஸமுத்ரா ஓகமநீய காத்ராஸ்ரீ
காந்தா ஓதாந்தா வேதாந்தா ஈவேள நலுகீட

---

## 32-வது கட்டம்.

நகுமோமு கனலேனி-மெட்டு.

பல்லவி.

நலங்கிடுவேனே என்நாதா நான்மகிழ்வாய்
நளின மலர்ப்பாதா ஸ்ரீமனோஹரனே நல

அநுபல்லவி.

கலங்காமலடியோர்களைக் காக்கும் தயாபரனே
கண்ணா கருமுகில் வண்ணா இதுதருணம் கருணையங்கடலே ந

சரணம்.

பச்சைமஞ்சல் பருப்புடனே அக்ஷதை வைத்திருக்கார்
பன்னீருடன் கெந்தம்பல புஷ்பம் அமைத்திருக்கார்
அச்சுதனே மண்டபத்தில் அனைவோருங் காத்திருக்கார்
அய்யாமெய்யாதுய்யா இதுஸமயம் அணியரங்கேசனே ந

---

## 33-வது கட்டம்.

### மாதாட பாராதேனோ-மெட்டு.

பல்லவி.

சந்தணம் பூசிகின்றாள் ஸாரஸ நேத்ரி சந்

அநுபல்லவி.

சுந்திரவிதி கோதை ஸுகந்த வாஸனைவீச சந்

சரணங்கள்.

1 பக்ஷமுடனேகோதை பரிமளரங்கர்க்கு
வக்ஷஸ்தலந்தனிலே வாரிஜகரத்தினால் சந்
2 பச்சைமல்லிகைபிச்சி பன்னீர்தன்னில்கனைத்து
இச்சையுடனேசாத்தி எதிரில்கின்றுகந்து சந்

---

## 34-வது கட்டம்.

### ஏமிமாயமோ என்னும் ஜாவளி-மெட்டு.

பல்லவி.

மந்தமாருதம்வீசவே வெண்சா
மறைகள்வீசுராள் கோதை மந்த

அநுபல்லவி.

சுந்திரசர திந்துவதன மந்தகாசர்மா ரமணர்க்கு மந்த

சரணம்.

கங்கணம்வங்கி காந்திமின்னவே கமலமாமலர் கோதை
செங்கைத்தலத்தில் விசிரிக்கொண்டு ரங்கராஜர்க்கெதிரில்
[நின்று

## 35-வது கட்டம்.

### வாசுதேவனே-மெட்டு.

பல்லவி.

குடைபிடிக்கிராள் கோதை குடை

சரணங்கள்.

1 குடைபிடிக்கிராள் குன்னைப்பிடித்தவர்க்கு
வடிவதாகவே மலர்க் குடை
2 அண்டம்படைத்தவர்க்கு அகிலம்நிறைந்தவர்க்கு
தண்டாமறைக்கையால் மலர் குடை

## 36-வது கட்டம்.

### கோடி மனோஜ-மெட்டு.

1 நீருங்கண்ணாடிபாரும் என்னுதா கம
லாசனன் பணிபாதா நீருங் கண்ணு

சரணங்கள்.

2 அண்டர்பணிதாளா தண்டுளவத்தோளா
அழகியமணவாளா பாரும்
ஆண்டாள் என்கையில் நேராய் நீரும் கண்ணு
3 கோமளவொய்யாரா ச்யாமளசரீரா
கோடிமன் மதாகாரா பாரும்
கோலக்கையென்கையில் நேராய் நீரும் கண்ணு

## 37-வது கட்டம்.

இராகம்-ஆனந்தபைரவி.

பத்யம்.

ஏர்மிகும் ஸ்ரீரங்க வாசகனே ராஜனே
என்பிராண நேசனே ஸ்ரீசனே கேள்
பார்தனில் வந்துயான் பாமாலே பாடியே
பக்தியாய் உமைக்காண ஆசை கொண்டேன்
கூர்விழி மார்களை கூட்டியே மகிழ்வுடன்
கூவியே உனைநாடி ஓடி வந்தேன்
மார்கழியில் நோம்புநான் மகிழ்வுடன் செய்தும்மை
மணமாலே சூடவே மனதில் நினைந்தேன்
தையினில் மன்மதனை தா னிரந்தேன்
ஐயாவுன்னைக் கூடியின்று என்மன மகிழ்ந்தேன்
கையில் தாம்பூல பலபுஷ்பங் கொண்டுவந்தேன்
தையலென் தாம்பூலம் வாங்கமே தண்டனிடுகிறேன்

---

## 38-வது கட்டம்.

தனவாரித-மெட்டு.

பல்லவி.

ஜயமங்களம் ஸ்ரீரங்கநாதா ஜய
அயனரன்போற்றும் அம்புயபாதா ஜயமங்களம்

சரணம்.

ஸத்வகுணசீலா ஸாதுபரிபாலா
அத்திக்காதிமூலா அசுரகுலகாலா ஜயமங்களம்

---

## 39-வது கட்டம்.

கௌரிதுய்ன கிங்குமாரி என்னும்-மெட்டு.

பல்லவி.

மாதேநான் நலங்கிடுகிறேன் மாமலர்க்கோதே மா

சரணங்கள்.

1 பாத மீதினில் காதலாகவே
பச்சைமஞ்சள் பூசிமிக்க இச்சையாகவே
2 புஷ்பஞ் சூட்டுகிறேன் பொட்டுமிடுகிறேன்
பூசுவேனே சந்தனமதை ஆசையாகவே

---

## 40-வது கட்டம்.

### இராகம் எதுகுலகாம்போதி.

பத்யம்.

அன்னநடை சின்னயிடை மின்னலொளி மாதரசே
ஆண்டாளே உன்மீதில் ஆசைகொண்டே
தங்கநிற மங்கையுன்னை கங்குல்பக லாகநான்
தரியாமல் மனமதில் தானினைந்தேன்
பொங்குபுகழ் தங்கியுறை ரங்கநகர் தனைவிட்டு
பூவையே புதுவைநகர் நாடிவந்தேன்
மல்லிவள நாடுறையும் அல்லிமலர் வல்லியுன்னை
மணமாலை சூட்டியே மனமகிழ்ந்தேன்
ஆதியரவணைப் பள்ளியும் நான் துறந்தேன்
ஆழிசங்கையும் ஏந்தாமல் மிகமறந்தேன்
சோதிசூடிக் கொடுத்தவளே இங்குவந்தேன்
சுருக்காக ஸ்ரீரங்கம்வாடி என்சுந்தராங்கி

---

## 41-வது கட்டம்.

### அச்சமோரிலாகிஸே-மேட்டு.

செண்டுவிளையாடினாள் ஸ்ரீரங்கமன்னாருடன்
ஆடினாள் ஸ்ரீரங்கமன்னாருடன்

சரணங்கள்.

1 கண்டுமொழிகோதை செண்டுமலர்மாதே
களிப்பாகி களிப்பாகி களிப்பாகியே

2 பொன்னரங்கவாசன் புண்ணியர் விச்வாசன்
புகழ்பாடி புகழ்பாடி புகழ்பாடியே
3 சுந்தரஞ்சேர்மாதே கந்தமலர்க் கோதை
ஸொகுஸாகி ஸொகுஸாகி ஸொகுஸாகியே
4 மாலரங்கர்மேலே மைய லதினலே
மகிழ்வாகி மகிழ்வாகி மகிழ்வாகியே

---

## 42-வது கட்டம்.

இராகம் புன்னகவராளி சாபுதாளம்.

ஓடம்.

அகிலமெல்லாம் மிகவிளங்க ஆதி
அரவணைமேல் பள்ளிகொள்ளும்
ரகுகுலத்தோர் குலதெய்வம் எங்கள்
ரங்கருடைய ஸன்னதிக்கு

முடுகு.

தர்மங்க ளானதொரு பலகைகள் சேர்த்து
தத்வங்க ளானதொரு பாய்மரம் நட்டு
நாலுவே தங்களும் நங்கூர மாக
நலமுள்ள திருமந்திரக் கொடியதனில் நாட்டி
அருபத்து நாலுகலை ஆணியைத் தைத்து
ஆகம புராணமெனுங் கயிறினல் கட்டி
அழகியதோர் த்வய மதனில் பீரங்கியாக
அணிகுருகை மாறன் அதர்க் கதிகாரியாக
நாலாயிர மெனும் நல்லதோர் பொருளை
ஞானமெனுங் கப்பலில் நன்ருக ஏத்தி
கப்பலில் வருகின்ற கனவான்கள் பேரை
களிப்புடன் சொல்கிறேன் கவனமாய்க் கேளீர்
மகிழ்மாரன் மதுரகவி மழிசையர் பாணன்
மங்கைமன்னன் பொய்கை பூதம் பேயாழ்வார்
பார்புகழ் சேரனுடன் பத்தரடிப் பொடியார்

பட்டர்பிரான் மகிழ் பாகவத ருடனே
ஆண்டாளுடன் ரங்க மன்னரும் ஏறி
அந்தணர்கள் பலர் ஜயஜயா வென்ன
கருணையென்னும் பெறிய கடலினைத் தாண்டி
காதலுடன் திருவரங்கம் வந்ததய்யா கப்பல்
கண்டார் துதி விண்டாரெங்கள்
கருணைமுகில் வடிவை
கமலந் தனில் வளர்மா மகள்
மகிழும்மண வாளந் தன்னை
ஏலேலோ ஏலேலோ கோவிந்தா
ஏலேலோ ஏலேலோ

---

## 43-வது கட்டம்.

ஆப்பிரியா-மேட்டு.

மங்களம்.

பல்லவி.

மாதுகோதை ஸமேதனே ஜயமங்களம் சுபமங்களம்

சரணங்கள்.

1 ஸாதுஸர்ஜன நேசனே விசுவாசனே ஜயமங்களம்
போதுவாழ் அயன்போற்றிடும் ஜகதீசனே சுபமங்களம் மா
2 ஆடிப்பூரத்தில் வந்துதித்தவ ளன்பனே ஜயமங்களம்
சூடிப்பூமலர் மாலைதந்தவள் இன்பனே சுபமங்களம் மா
3 ராமன்போற்றிடும் நேமனே ரங்கதாமனே ஜயமங்களம்
பூமனே பரந்தாமனே அருள்நாமனே சுபமங்களம் மா
4 தாமறைமலர் மாமகிழ்மண வாளனே ஜயமங்களம்
நேமமாய்ரங்க நாயகிக்கருள் குணாளனே சுபமங்களம் மா

ஆண்டாள் திருவடிகளிலே சரணம்.

ஆண்டாள் கல்யாண மென்னும்

கோதை பரிணயக் கும்மி.

முற்றிற்று.

இந்தப் புஸ்தகம் வேண்டுவோர் ஸ்ரீரெங்கம் வடக்குச் சித்திரைவீதி 333 நெ. வீட்டில் பெற்றுக்கொள்ளலாம்.